②

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## திண்டுக்கல் மாவட்டம்

## 1432ம் பசலி வாழைக்காய் இனம் - 2 சப்ளைக்கான - ஒப்பந்தப்புள்ளி படிவம்

பசலி 1432-க்கு திருக்கோயில் உத்தரவு தேதி முதல் **ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜீன் ஆகிய 8 மாதங்களுக்கு மட்டும்** (பசலி 1432) **24.06.2022 தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வ எண் | சப்ளை செய்யப்படவுள்ள இனத்தின் முழு விபரம்<br><br>**இனம் - 2** | **ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜீன் ஆகிய 8 மாதங்களுக்கு மட்டும்** குறிப்பிடப்பட வேண்டிய ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் கிலோ ஒன்றுக்கு விலை (அனைத்து வரிகள் உள்பட ) ரூ. பை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | நல்ல திரட்சியுடன் உள்ள முதல் தரமான **கற்பூரவள்ளி வாழைக்காய் சப்ளை** செய்ய கிலோ ஒன்றுக்கு விலை வாழைக்காய் ஒவ்வொன்றும் 12 செ.மீ சுற்றளவும் 80 கிராம் எடைக்கும் குறைவில்லாமல் இருக்க வேண்டும | |
| 2 | நல்ல திரட்சியுடன் உள்ள முதல் தரமான **குடகுமலை வாழைக்காய் சப்ளை** செய்ய கிலோ ஒன்றுக்கு விலை வாழைக்காய் ஒவ்வொன்றும் 12 செ.மீ சுற்றளவும் 65 கிராம் எடைக்கும் குறைவில்லாமல் இருக்க வேண்டும். | |
| 3 | நல்ல திரட்சியுடன் உள்ள முதல் தரமான **மலை வாழைக்காய் சப்ளை** செய்ய கிலோ ஒன்றுக்கு விலை வாழைக்காய் ஒவ்வொன்றும் 11 செ.மீ சுற்றளவும் 50கிராம் எடைக்கும் குறைவில்லாமல் இருக்க வேண்டும். | |

<u>குறிப்பு.</u>

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.

2. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத சால்வன்சி /வரைவோலை ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.

5. **இவ்வினத்தில் கற்பூரவள்ளி வாழைக்காய், குடகுமலை வாழைக்காய், மலைவாழைக்காய்களின் விலை தனித்தனியாக ஒவ்வொரு இனத்திற்கு ஒப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு இனத்திலும் குறைவாக கொடுத்துள்ளவர்களின் விலைப்புள்ளி பரிசீலிக்கப்படும்.**

6. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

7. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (**PAN CARD**)**& GST** சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

**1432-ம் பசலிக்கு பஞ்சாமிர்தம் தயார் செய்ய கற்பூரவள்ளி வாழைக்காய், மலை வாழைக்காய் மற்றும் குடகு வாழைக்காய் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

**இனம் 2. ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜீன் ஆகிய 8 மாதங்களுக்கு மட்டும்** பசலி 1432க்கு 01.07.2022 முதல் 30.06.2023-ம் தேதி முடிய உள்ள காலத்திற்கு 1. கற்பூரவள்ளி வாழைக்காய் 2. மலை வாழைக்காய் 3.குடகு வாழைக்காய் மட்டும் சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி

**எதிர்வரும் 24.06.2022 தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022 ம் தேதி பிற்பகல் 3.00 மணிஅளவில்** ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நபர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**இனம் -2**

**ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜீன் ஆகிய 8 மாதங்களுக்கு மட்டும் ஒரு ஒப்பந்தப்புள்ளியும் தனித்தனியாக கொடுக்கப்பட வேண்டும்.**

**ஒப்பந்த படிவத்தில் ஒவ்வொரு வாழைக்காய்க்கும் தனித் தனியாக விலையை குறிப்பிட வேண்டும்.**

**சப்ளை செய்ய வேண்டிய இனத்தின் விவரம்**

**கற்பூரவள்ளி வாழைக்காய்** - பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்கு தேவையான நல்ல திரட்சியுடன் 12 செ.மீ சுற்றளவும் 80 கிராம் எடையும் கொண்ட தரமான கற்பூரவள்ளி வாழைக்காய்கள் சப்ளை செய்தல்.

வேதிப்பொருட்கள் ஏதும் பயன்படுத்தக் கூடாது.

**மலை வாழைக்காய்** - பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்கு தேவையான விருப்பாச்சி, சிறுமலை, பாச்சலூர், ஆடலூர், பன்றிமலை, வடகவுஞ்சி, பெருமாள்மலை, தாண்டிக்குடி, கேசிபட்டி ஆகிய இடங்களில் விளையும் நல்ல திரட்சியுடன் உள்ள 11 செ.மீ சுற்றளவும் 50 கிராம் எடையும் கொண்ட தரமான மலை வாழைக்காய்கள் சப்ளை செய்தல்

வேதிப்பொருட்கள் ஏதும் பயன்படுத்தக் கூடாது.

**குடகுமலை வாழைக்காய்** - பஞ்சாமிர்தம் தயாரிக்க தேவையான குடகுமலை பகுதியில் விளையும் நல்ல திரட்சியுடன் உள்ள 12 செ.மீ சுற்றளவும் 65 கிராம் எடையும் கொண்ட தரமான குடகுமலை வாழைக்காய்கள் சப்ளை செய்தல்

வேதிப்பொருட்கள் ஏதும் பயன்படுத்தக் கூடாது.

**1432ம் பசலிக்கு மொத்த உத்தேச கொள்முதல் அளவு** -

1) கற்பூரவள்ளி வாழைக்காய் - 1500 டன்
2) மலைவாழைக்காய் - 5 டன்
3) குடகு வாழைக்காய் - 10 டன்

**விலை குறிப்பிடுவதற்கான விவரம்**

ஒவ்வொரு வாழைக்காய் இனத்திற்கும் தனிதனியாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற்று கிலோ 1-க்கு விலையை குறிப்பிட்டு சமா்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட உத்தேச கொள்முதல் அளவில் கணக்கிட்டு மொத்த தொகை ஒப்பந்த தொகையாக எடுத்துக்கொள்ளப்படும்.

ஒப்பந்ததாரர் குறிப்பிடும் விலையானது அரசால் நிர்ணயிக்கப்படும் விற்பனை வரி , வருமான வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி தொகையை எண்ணாலும், எழுத்தாலும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் முழு முகவரியை தனது அலைபேசி எண்ணையும் சேர்த்து தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

1 அனைத்து இனங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை **http://www.hrce.tn.gov.in (or) http://palanimurugan.hrce.tn.gov.in** or **http://www.tenders.tn.gov.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ரூ.15,000/-க்கான வங்கி வரைவோலையினையும், GST தொகை ரூ.1800/- கருவூலத்தில் செலுத்தியதற்கான அத்தாட்சியும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அலுவலகத்தில் செலுத்தவேண்டும். அவ்வாறு இணைக்காத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

2 ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக **ரூ.25,00,000/-** (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) " இணை ஆணையர்/ செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். வங்கி வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3 01.05.2022ம் தேதிக்குப்பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான **ரூ.25,00,000/-**க்கான (ரூபாய் இருபத்து ஐந்து லட்சம் மட்டும்) அசல் சால்வன்சி சான்றிதழ் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு " இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பெயரில் பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாகவும் செலுத்தலாம்.

4 ஒப்பந்தப்புள்ளிதாரரது நிரந்தர கணக்கு எண் அட்டையின் (PAN CARD)& GST நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5 ஒப்பந்ததாரர் பெயரில் வாழைக்காய் வியாபாரம் செய்து வருவதற்கு நடப்பு காலத்தில் செல்லத்தக்க வகையில் வணிகவரித்துறையில் பதிவு செய்ததற்கான பதிவு சான்றிதழ் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும்.

6 ஒப்பந்தப்புள்ளி வழங்கும் நபர் வாழைக்காய் மொத்த கொள்முதல் வியாபாரத்தில் குறைந்தது 3 வருட அனுபவம் இருக்க வேண்டும். வியாபாரத்தில் 3 வருடம் அனுபவத்திற்கான வியாபார கணக்குகளை பட்டய கணக்கர் **(Chartered Accountant)**தணிக்கை செய்ததற்கான சான்று பெற்று அசலாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

7 கடந்த 5 ஆண்டுகளில் ஏதாவது ஓர் ஆண்டில் வருடம் ஒன்றுக்கு வாழைக்காய் வியாபாரத்தில் ரூ.50,00,000/- **(ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்)** குறையாமல் வரவு செலவு செய்ததற்காக வருமான வரித்துறையில் தாக்கல் செய்த **Balance Sheet** பட்டய கணக்கரால் **(Chartered Accountant)** மேலொப்பம் **(Attested)** செய்யப்பட்ட நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்கப்பட வேண்டும். மேலும் வருமான வரி செலுத்தியதற்கு **(Income Tax)** சான்றின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

8 ஒப்பந்தப்புள்ளிதாரர் தன் பெயரில் தன் சொந்த விலாசத்தில் வாழைக்காய் கடை வைத்து வியாபாரம் செய்வதற்கான நகராட்சி / மாநகராட்சியிடம் நடப்பு காலத்திற்கான உரிமம் பெற்றதிற்கான உரிமச்சான்று நகல் ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டாயம் இணைக்க வேண்டும்.

9 ஒப்பந்ததாரர் 21 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும். இதற்கான சான்றாக கல்விச்சான்று, பிறப்பு சான்று, வாக்காளர் அடையாள அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், ஆதார்அட்டை போன்ற ஆவணங்களில் ஏதாவது ஒன்றின் நகலினை சான்றாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

10 மேற்காணும் வரிசை எண்.1 முதல் 9 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

11 ஒப்பந்ததாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

12 பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளரிடம் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்றுக்கொண்டு, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ள விவரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு தரமான மேற்படி வாழைக்காய்களை தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிசந்தையில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு அதனால், ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.மேலும், ஒப்பந்ததாரர் பெயர் கருப்பு பட்டியலில் சேர்க்கப்படும்.

13 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் கற்பூரவள்ளி வாழைக்காய், மலை வாழைக்காய் மற்றும் குடகு வாழைக்காய் ஆகியவைகளை பஞ்சாமிர்தப் பிரிவு பொறுப்பாளர் நல்ல தரமானது எனத் திருப்தியடைந்த பிறகே அவர் முன்னிலையில் எடைபோட்டு கொடுக்க வேண்டும். வாழைக்காய்கள் திரட்சியற்றதாகவும், பிஞ்சாகவும் இருந்தாலும், பஞ்சாமிர்தம் தயாரிக்க ஏற்றதாக இல்லாமல் இருந்தாலும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அதை நிராகரிக்க உரிமையுண்டு. இதற்கான தொகை எதுவும் கோர ஒப்பந்தக்காரருக்கு உரிமை எதுவும் இல்லை. வாழைக்காய் தாரிலுள்ள வாழைக்கட்டைகளை நீக்கம் செய்து வாழைக்காய்கள் சீப்புகளை மட்டும் சப்ளை செய்ய வேண்டும்.

14 ஒப்பந்தப்புள்ளிதாரர் திருக்கோயில் தேவைக்கு அதிகமான மேற்படி வாழைக்காய்களை சேமித்து வைத்து வாழைக்காய் கெட்டுப்போனால், அதற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பேற்காது. மேலும், புயல், மழை போன்ற இயற்கை சீற்றங்களினால் வாழைக்காய்க்கு சேதமேற்பட்டதாககூறி சப்ளையை நிறுத்தக்கூடாது. தேவைக்கேற்ப தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும்

15 சப்ளை செய்யப்படும் மேற்படி வாழைக்காய்களுக்காக ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியல் ஒவ்வொன்றிலும் 10% வீதம் பட்டியல் தொகை மற்றும் வருமான வரித்தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும்

16 ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்த 10% பட்டியல் தொகை பசலி முடிந்தவுடன் ஒப்பந்தப்புள்ளிதாரரால் திருக்கோயிலுக்கு ஏதும் இழப்பேற்பட்டதா என பரிசீலனை செய்து, இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினைப்பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை இருப்பின் வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

17 ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி தொகைக்கு உரிய Form-16 திருக்கோயிலிலிருந்து வழங்கப்படும்.

18 திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவர்களோ, திருக்கோயிலுக்கு எவ்வகையிலேனும் பாக்கி செலுத்த வேண்டியிருப்பவர்களோ, திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்களோ, திருக்கோயில் பணியாளர்களோ அல்லது பணியாளர்களுடன் இரத்த சம்பந்தப்பட்ட நெருங்கிய உறவினர்களோ திருக்கோயில் நிர்வாகத்தில் எவ்வகையிலேனும் ஒப்பந்த முறையில் பணிபுரிபவர்களோ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பொருள் குறித்து திருக்கோயில் நிர்வாகத்தின முடிவே இறுதியானது.

19 திருக்கோயில் பழக்க வழக்கங்கள் நடைமுறைகளுக்கு விரோதமாக ஒப்பந்தத்தை துய்க்க கூடாது. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நன்கு அறிந்தும், தெரிந்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதாகவே கருதப்படுவார்கள்.டெண்டர் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

20 ஒப்பந்தப்புள்ளிதாரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனது சொந்த செலவில் உடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்தான ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

21 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட்ட மேற்படி வாழைக்காய்களுக்கு பட்டியல் வழங்குவதில் நிர்வாக ரீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்தக் காலதாமதத்தைக் காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைக்கேற்ப தடையின்றி வழங்க வேண்டும். 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து வாழைக்காய் சப்ளை செய்ய வேண்டும்.

22 ஒப்பந்தப்புள்ளிதாரர் ஐயப்ப பக்தர்கள் வருகை காலமான "ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்கள்", "தைப்பூசம்", "பங்குனி உத்திரம்" போன்ற திருவிழா காலங்கள், கோடை விடுமுறை மற்றும் விசேட காலங்களில் பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளர் வழங்கும் கொள்முதல் கேட்பு சீட்டு அளவின்படி தவறாது தேவையான அளவு குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க வேண்டும். மாற்று ஏற்பாடு செய்து கொள்ள திருக்கோயில் நிர்வாகத்தை கோர ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு உரிமை இல்லை.

23 ஒப்பந்தப்புள்ளிதாரர் சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தப்புள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்ஒப்பந்தம் விடவோ கூடாது. இந்நிபந்தனைகளை மீறினால் ஒப்பந்தப்புள்ளி முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.

24 ஒப்பந்தப்புள்ளிதாரர் இத்திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும், நடைமுறை விதிகளுக்கும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சட்ட திட்டங்களுக்குட்பட்டு சப்ளை செய்ய வேண்டும்.

25 ஒப்பந்தப்புள்ளிதாரர் தேவைக்கேற்ப வாழைக்காய்களை சப்ளை செய்யாவிட்டாலோ தேவைப்பட்டியல்படி வழங்காமல் குறைவாக வழங்கினாலோ அல்லது திருக்கோயில் சட்டதிட்டங்கள் மற்றும் நடைமுறை விதிகள் மற்றும் சென்னை, இந்து சமய அறநிலையத்துறை சட்டதிட்டங்களுக்கு மாறாக செயல்பட்டாலோ எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும்.

26 ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு திருக்கோயிலுக்குத் தேவையான மேற்படி வாழைக்காய்கள் வெளிச்சந்தையிலோ, விலைப்புள்ளி மூலமோ அல்லது மறுடெண்டர் மூலமோ கொள்முதல் செய்யப்படும். அதனால், திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் இழப்புத்தொகை முழுவதும் முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். திருக்கோயில் மூலம் பிடித்தம் செய்யப்பட்ட 10% தொகை போதுமானதாக இல்லாவிட்டால் கட்டப்பட்டுள்ள டெபாசிட் தொகையில் மீதி தொகை பிடித்தம் செய்யப்படும். மேற்கண்ட இரண்டு தொகைகளும் போதுமானதாக இல்லை எனில் சட்டப்படி நீதிமன்றம் மூல்ம நடவடிக்கை எடுத்து வட்டியுடன் வசூலிக்கப்படும்.

27 எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கிடையாது.

28 இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரம் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினைத் தவிர மற்றவர்களுக்கு வைப்புத் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

29 ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அங்கீகாரத்திற்கு உட்பட்டது

30 1432-ம் பசலித் தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று வாழைக்காயகள் சப்ளை செய்த வகையில் தணிக்கைத்தடை ஏதுமில்லையென்று தெரிந்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரரின் ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின், அதனை பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

31 ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பின்பற்ற தவறினாலோ அல்லது சரிவர நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

32 ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் சப்ளை செய்யப்படும் காலத்தில் வரி விகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும், ஒப்பந்தப்புள்ளி விலைக்கே ஒப்பந்தக்காலம் முடியும் வரை ஒப்பந்தப்புள்ளிதாரர் சப்ளை செய்ய வேண்டும்.

33 மது அல்லது லாகிரி வஸ்துக்கள் அருந்தியவர்களோ, இந்துக்கள் அல்லாதவர்களோ ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

34 ஒப்பந்தப்புள்ளி தேதி, நேரம் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்றியமைக்க இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கிடையாது.

35 திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுபவர்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவர்கள், ஒப்பந்தப்புள்ளிகளை பசலி காலம் முடிய பூர்த்தி செய்யாதவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

36 இனம் 2க்கு ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் ரூ.25,00,000/-ம் சால்வன்சி ரூ.25,00,000/-ம் செலுத்தப்பட வேண்டும். இனம் 1ல் உள்ள கற்பூரவள்ளி, பூவன் வாழைக்காய் ஆகியவையும், இனம் 2ல் உள்ள கற்பூரவள்ளி, மலைவாழை, குடகுமலை வாழை ஆகியவற்றின் விலைகள் தனித்தனியே ஒப்பீடு செய்யப்படும்.

37 ஒருவர் கொடுத்த டெண்டர் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டார் என்று இணை ஆணையர்/செயல் அலுவலர் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

38 **திருக்கோயில் நிர்வாகம் தெரிவிக்கும் வாழைக்காயினை மட்டுமே சப்ளை செய்ய வேண்டும். குறிப்பிட்ட இனத்தை கொள்முதல் செய்ய வற்புறுத்தக் கூடாது.**

39 இதர நிபந்தனைகள் டெண்டர் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்).நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

30/5/2022
மேலாளர்
30/5/22